# 1. நிறுவனத்தின் சுருக்க விபரம்

## 1.1.அறிமுகம்

உள்ளூர் அதிகார சபைகளில் ஒன்றான பிரதேச சபையானது 1987ம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் மூலம் வடமாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சின் கீழும் தொழிற்பட்டு வருகின்றது.

## 1.2.நிறுவனத்தின் நோக்கு, குறிக்கோள்


**நோக்கு**

“வலிகாமம் மேற்கின் அனைத்து மக்களினதும் வளமான வாழ்வுக்கு உள்ளூராட்சி வரைமுறைகளுக்கு உட்பட்டு மக்கள் பங்கேற்புடன் ஒருங்கிணைந்த சேவைகளை வழங்கி முன்னுதாரண பிரதேசசபையாக மிளிர்தல்.”

**குறிக்கோள்**

“பிரதேச மக்களின் நிகழ்கால, எதிர்கால தேவைகளை அறிந்து அதன் மூலம் எதிர்கொள்ளும் அனைத்து சேவை நோக்கங்களிலும் வெற்றி பெற்று வளமான பிரதேசமாக வலிகாமம் மேற்கினை மாற்றுவதற்கு ஏற்ற திட்ட வரைபுகளை தோற்றுவித்து, முனைந்து தொழிற்பட்டு மகிழ்ச்சிகரமான சமுதாயத்தை உருவாக்க நிறைவான சேவைகளை வழங்குதல்.”


## 1.3.பிரதான பணிகள்



**1.4.** பிரதேச வரைபடம்



## 1.5. ஒழுங்கமைப்பு குறிப்பு



## 2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

### 2.1 ஆண்டு அடைவுகள்

2022ஆம் ஆண்டின் ஆரம்பம் தொடக்கம் ஆண்டிறுதி வரை நாட்டின் பொருளாதா நெருக்கடி காலகட்டத்திலும் எமது பிரதேசசபையினால் பலதரப்பட்ட அபிவிருத்தி வேலைதிட்டங்களும் விழிப்புணர்வு செயற்பாட்டு நடவடிக்கைகளும் நிதி வளம் மற்றும் பௌதீக, பயன்பாட்டு வளங்களை கொண்டு சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக முடிவுறுத்தப்பட்டுள்ளது..

வலிகாமம் மேற்கு பிரதேசசபையானது உள்ளூராட்சி மன்றங்களிற்கான செயலாற்றுகை மதிப்பீட்டில் 2021 ஆம் ஆண்டில் 225.96 புள்ளிகளுடன் Tier – 02 எனும் நிலையில் மதிப்பிடப்பட்டு வினைத்திறனான செயற்பாட்டின் மூலம் 2022 ஆம் ஆண்டின் செயலாற்றுகை மதிப்பீட்டில் Tier 02 இலிருந்து Tier 01 ஆக முன்னேற்றமடைந்து 694.08 புள்ளிகளுடன் வலிகாமம் மேற்கு பிரதேச அபிவிருத்திக்காக 35 மில்லியன் ரூபாவை பெறக்கூடிய தரத்திற்கு முன்னேற்றமடைந்துள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேசசபையானது செயலாற்றுகை மதிப்பீட்டில் மாகாண நிலையில் 8ஆம் இடத்திலும், மாவட்ட நிலையில் 6 ஆம் இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் கீழ்வரும் பிரிவுகளின் அடிப்படையில் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்
- சுகாதாரமும் விழிப்புணர்வும் செயற்திட்டங்கள்
- விசேட செயற்திட்டங்கள்

✓ கீழ்வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் எம்மால் ஏற்படுத்தப்பட்டு குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன் சில வேலைத்திட்டங்கள் முன்மொழியப்பட்டு அடுத்த ஆண்டிற்காக வழங்கப்பட்டுள்ளது.

1. சபைநிதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்.
2. ஏனைய நிதிப்பங்களிப்புடனான வேலைத்திட்டங்கள்.

**அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்**

1. **சபைநிதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்.**

| S. No | Description of Work | | Implementing Agency | Source of Fund | TEC (Rs. in mn) | Plan for | | Allocation for the year (Rs. In mn) | Financial Achievement (Rs. In mn) | Unit( Km, Nos, etc) | Physical Progress (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Date of Commencement | Date of Completion | | Total Expenditure (Rs.in mn) | | |
| | | | | | | | | | | | |
| 1 | Renovation Of Chankanai Area Roads | 1.Barathy Veethy Branch Lane<br>2.Hospital Road 2nd Lane & Hospital South Road Branch Lane<br>3.Inchchilakai Road At Chankanai (Near A.M.T.M School )<br>4.Odaikarai Road 2nd Lane Branch Lane. | Vali West PS | Council | 4.85mn | 29.12.2022 | 26.03.2023 | 6.4mn | _ | 543M | 25% |
| 2 | Renovation Of Vaddu Area Roads Group I | 1.Noththaris Road<br>2.Thunaivi Valarmathi Community Center Road<br>3.Thankodai Road | Vali West PS | Council | 3.69mn | 29.12.2022 | 26.02.2023 | 4.8mn | _ | 358M | 25% |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **3** | Renovation Of Vaddu Area Roads Group II | 1.Peruvalavu Road<br>2.Ganavairavar Kovil lanes &<br>Dutch Road Branch lane | Vali West PS | Council | 2.5mn | 29.12.2022 | 26.03.2023 | 3.2mn | - | 260M | 25% |
| **4** | Renovation Of Chulipuram Roads Group I | 1.Meikandan School Road 2nd lane<br>2.Sangakadai 2nd lane<br>3.Panipulam Kaladdy 1st lane | Vali West PS | Council | 3.76mn | 29.12.2022 | 26.03.2023 | 4.75mn | _ | 342M | 25% |
| **5** | Renovation Of Chulipuram Area Roads Group II | 1.Nelliyan Branch Lane<br>2.A.M.T.M School road branch lane<br>3.Kandamay 2nd lane | Vali West PS | Council | 3.6mn | 29.12.2022 | 26.03.2023 | 7.43mn | _ | 390M | 25% |
| **6** | Renovation Of Chulipuram Area Roads Group III | 1.Paralai Ratalady Road (Puthu Road)<br>Branch Lane Chulipuram<br>2.Iyanar Road Branch Lane At Chulipuram<br>3.Rathaladi Road Branch Lane Chulipuram<br>4.Pandavodai Road Branch Lane Chulipuram | Vali West PS | Council | 3.29mn | 29.12.2022 | 26.03.2023 | 4.1mn | _ | 342M | 25% |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **7** | Renovation Of Chulipuram Area Road Group IV | 1.Karinagar road Kammalay Road Joint Road.<br>2.Ponnalai 1st Road Branch Road Chulipuram | Vali West PS | Council | 2.55mn | 29.12.2022 | 26.03.2023 | 3.2mn | | | 212M | 25% |
| **8** | Renovation Of Araly Area Roads | 1.Araly Amman Kovil 3rd Lane &<br>Araly Amman Kovil 2nd Lane<br>2.Karunaimahal Road Left Side 1st Lane &<br>Seddy Kurichchi Pillaiyar Kovil Road<br>Right Side 2nd Lane<br>3.Odaikaadu 3rd Lane (Agrarian Road)<br>4.Cemetry Road | Vali West PS | Council | 4.79mn | 29.12.2022 | 26.03.2023 | 6.4mn | | | 575M | 75% |

**2. ஏனைய நிதிப்பங்களிப்புடனான வேலைத்திட்டங்கள்.**

# World Bank Fund (LDSP)

| S. No | Description of Work | Implementing Agency | Source of Fund | TEC (Rs. in mn) | Plan for: Date of Commencement | Plan for: Date of Completion | Allocation for the year (Rs. In mn) | Financial Achievement (Rs. In mn): Total Expenditure (Rs.in mn) | Unit( Km, Nos, etc) | Physical Progress (%) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Construction of Retaining wall Jaffna Road 1st lane (Vilesuddy Road) Stage II | Vali West PS | World Bank | 12.38mn | 07.01.2022 | 07.04.2022 | 10.14mn | 13.77mn | 960 m | 100% |
| 2 | Construction of Fish market, Meat Stall and Dry fish Shop at sathiyakaadu, Chulipuram. | Vali West PS | World Bank | 10.14mn | 01.02.2022 | 02.05.2022 | 10.91mn | 9.43mn | 118S q.m | 100% |
| 3 | Supplying and Installation of LIFT at head office building of valikamam west pradeshiya sabha, Chulipuram. | Vali West PS | World Bank | 0.55mn | 05.07.2022 | 03.10.2022 | 0.55mn | 7.68mn | 01 | 100% |
| 4 | Renovation of Araly East Fisheris road at Araly | Vali West PS | World Bank | 4.923mn | 21.11.2022 | 19.02.2023 | 4.923mn | – | 77m Road & Retaining Wall | 50% |

1. Construction of Retaining wall Jaffna Road 1st lane (Vilesuddy Road) Stage II

Before



After



2. Construction of Fish market, Meat Stall and Dry fish Shop at sathiyakaadu, Chulipuram.



Before



After

3. Supplying and Installation of LIFT at head office building of valikamam west pradeshiya sabha, Chulipuram.







4. Renovation of Araly East Fisheris road Araly

Before



During



## ➢ சுகாதாரமும் விழிப்புணர்வும் செயற்திட்டங்கள்

### 1. டெங்கு 2022…………..



- வலிகாமம் மேற்கு பிரதேச சபையினால் தேசிய டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 20.01.2022 ஆம் திகதி வியாழக்கிழமை, 21.01.2022 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய இரண்டு தினங்களும் வலிகாமம் மேற்கு பிரதேச சபையினுடைய 25 கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் டெங்கு ஒழிப்பு தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இச்செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக பொறுப்பு கூறும் உத்தியோகத்தர்களாக சுகாதார பரிசோதகர்கள், உப அலுவலகப் பொறுப்பதிகாரிகள், வேலை மேற்பார்வையாளர் மற்றும் சுகாதாரத்தொழிலாளர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். இவர்களின் கண்காணிப்பு மற்றும் உத்தியோகத்தர், ஊழியர்களின் பங்குபற்றுதலுடன் பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

- டெங்கு நோய் பரவுவதற்கான நிலைமைகள் தொடர்பாகவும் அதனை கட்டுப்படுத்துதல் தொடர்பாகவும் விழிப்புணர்வுகள் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.




- சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய நான்கு உப அலுவலக வளாகங்கள், தலைமை அலுவலக வளாகம், சங்கானை பொதுச்சந்தை மற்றும் அண்மித்த பகுதிகளில் சபையினுடைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மூலம் 21.01.2022 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 8.30 மணி தொடக்கம் 11.30 மணி வரைக்கும் சிரமதானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.









- அத்துடன் டெங்கு பரவலைக்கட்டுப்படுத்துதல் தொடர்பாக பொதுமக்களுக்கு விழ்ப்புணர்வூட்டும் வகையிலும் மக்களை கவரக்கூடிய வகையிலும் கேளிக்கை உடை மற்றும் "வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் டெங்கை முற்றாக ஒழிப்போம்" என்ற வாசகம் அணிந்து உத்தியோகத்தர்கள், ஊழியர்களினால் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டது.









வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

தேசிய டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2022
பொது மக்களுக்கான வேண்டுகோள்.

மூன்று நாட்களுக்கு ஒருமுறையாவது கீழ்காணப்படும் செயற்பாடுகளை செய்து வீடு, அலுவலகம், பொது இடங்கள் மற்றும் சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யவும். உங்கள் கவனமின்மையால் உங்கள் குடும்பத்தினருக்கு மட்டுமல்ல அயலவர்களுக்கும் டெங்கு நோய்பரவக்கூடும்.

கவனமின்மையால் நுளம்புகள் பரவுவதற்கு நீங்கள் உடந்தையாக இருப்பது உறுதியாக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

| தொ இல | சுத்தப்படுத்த வேண்டிய இடம். |
|---|---|
| 01 | மரப் பொந்துகள் இருப்பின் அவற்றினை அகற்றுதல் அல்லது மூடிவிடல். |
| 02 | மழைநீர் வழிந்தோடும் குழாய்களை நீர் அடித்து செல்லுமாறு சுத்தம் செய்தல் |
| 03 | வீட்டைச்சுற்றியுள்ள வடிகால் தொகுதிகளை சுத்தம் செய்தல் |
| 04 | பயன்படுத்தலில்லாத மலசலகூட பேசின்களை முறையாக சுத்தம் செய்தல் |
| 05 | மலசலகூட குழிகள் திறந்திருக்கும் இடங்களை மூடிவிடுங்கள். |
| 06 | மலசலகூட முறைமை (System) எந்நேரமும் மூடிவைத்திருத்தல். |
| 07 | பயன்படுத்திய பிளஸ்ரிக் போத்தல், தேங்காய் சிரட்டை, கண்ணாடி, இரும்பு, எலக்ரோனிக்பொருட்கள் ஆகியன தரம்பிரித்து வேறு உறைகளில் இட்டு சரியான முறையில் அகற்றப்படுதல். அல்லது பிரதேச சபை வாகனத்தில் கையளிப்போம். |
| 08 | நீர் நிரப்பட்டிருக்கும் தொட்டி மற்றும் பரல் போன்றவைகளை நுளம்பு உட்செல்லாமல் மூடிவைத்திருத்தல். |
| 09 | தேங்காய்ச்சிரட்டை, யோக்கட் கோப்பை, வெற்று ரின், பயன்படுத்தப்பட்ட மண்சட்டி பாத்திரம் மற்றும் நீர்தேங்கியிருக்கும் பொருட்கள் அன்றாடம் அகற்றப்படுதல் அல்லது புதைக்கப்படுதல். |
| 10 | வீட்டுச் சூழலை சுத்தம் செய்தல். தேக்கு இலை போன்ற நீர் தேங்கும் இலைகள் மற்றும் ஏனைய உக்கக்கூடிய குப்பைகள் புதைக்கப்படுதல். அல்லது சேதனப்பசளையாக்கப்படுதல் அல்லது எரித்தல். |
| 11 | காணிகளின் முன்னால் உள்ள பாதைப்பகுதிகள் மற்றும் வடிகால்கள் சுத்தம் செய்து நீர்தேங்கியிருக்காது நீர் வழிந்தோடுவதற்கு ஏற்பாடு செய்தல். |
| 12 | பழமையான சீமெந்து தொட்டிகளில் நீர் தேங்கியிருப்பதை தடுப்பதற்கு ஏற்பாடு செய்தல். |
| 13 | வீட்டில் உள்ள தடாகத்தினை சுத்தம் செய்தல். நுளம்புக் குடம்பிகளை உண்ணும் மீன்களை தடாகத்தில் விட்டுவிடல். |
| 14 | நுளம்பு பரவக்கூடிய வேறு இடங்களை எந்நேரமும் சுத்தம் செய்வதை கவனத்தில் கொள்ளுதல். |
| 15 | வீட்டில் காணப்படும் குளிர்சாதனப்பெட்டி, வாயு சீராக்கும் பொறி இயந்திரத்தில் நீர்தங்கும் இடங்களை சுத்தம் செய்தல் |
| 16 | வீட்டிலுள்ள நீர் பில்டர், நீர் தங்கும் இடங்களை சுத்தம் செய்தல் |
| 17 | தங்களின் பயன்பாடற்ற காணிகளை துப்பரவு செய்தலும் பயன்பாடற்ற அயற்காணிகளை உரிய திணைக்களங்களுக்கு அறிவித்து துப்பரவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். |

மேற்கூறப்பட்ட சுத்தம் செய்யும் முறைகளை ஒவ்வொரு நாளும் செய்யவும். தவறின் மூன்று நாட்களுக்கு ஒரு முறையாவது செய்யப்பழகிக்கொள்ளவும்.

தவிசாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.
சுழிபுரம்.

- பொது இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டன.




## 2. திண்மக் கழிவு சேகரித்தல் 2022 …………

- நாளொன்றிற்கு சராசரியாக 1.8 Tractor load கழிவுகள் தரம்பிரித்தலின் அடிப்படையில் சேகரிக்கப்படுகின்றன.

  உக்கக்கூடிய கழிவு – 19.14% உம் உக்காத கழிவு 80.85% உம் அகற்றப்படுகின்றன.

  1. வட்டாரம் 02 – சுழிபுரம் கிழக்கு
  2. வட்டாரம் 07 – சங்கானை மேற்கும், மத்தியும்.
  3. வட்டாரம் 09 – வட்டுக்கோட்டை வடக்கும் மேற்கும்.





- கழிவகற்றல் அட்டவணை

**தரம் பிரித்து கழிவகற்றல் தொடர்பான**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை**
**மக்களுக்கான முக்கிய அறிவித்தல்**

(01-05-2022 ல் இருந்து)

- தங்களிடம் உள்ள உக்கக்கூடிய கழிவுகளை இயன்றவரை தங்கள் வீடுகளிலேயே குப்பைக்குழி அமைத்து சேதனப்பசளையாக பயன்படுத்தவும்.
- அன்றாட சமையலறை, உணவுக்கழிவுகள் தவிர்ந்த ஏனைய பெருமளவிலான விவசாய கழிவுகளையும் மரக்கிளைகள், வாழைத்தண்டுகள், ஓலைகள் என்பவற்றை தங்களது வீடுகளில் வைத்திருந்து பிரதேச சபையுடன் தொடர்பு கொண்டு கட்டணம் செலுத்திய பின்னர் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். சிறியளவிலான கழிவுகளை உழவு இயந்திரத்தில் ஏற்றக்கூடியவாறு சிறிது சிறிதாக வெட்டி வைத்தால் அக் கழிவுகள் அகற்றப்படும்.
- உக்க முடியாத கழிவுகளை **கண்ணாடி, பொலித்தீன் மற்றும் உக்காத கழிவுகள்** (உலோகங்கள், பிளாஸ்ரிக், ஏனையவை) என மூன்றாக தரம் **பிரித்து** வழங்க வேண்டும். **தரம் பிரிக்காத** கழிவுகள் பிரதேச சபை **கழிவகற்றல்** வாகனத்தில் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- கட்டிட இடிபாட்டு கழிவுகள் பிரதேச சபை உப அலுவலகத்தில் கட்டணம் **செலுத்தி** அகற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.
- **பம்பஸ்** போன்ற கழிவுகள் அயலவர்களுக்கு அருவருப்பை ஏற்படுத்தாத **விதத்தில்** நன்கு பொதியிட்டு திண்மக்கழிவு சேகரிக்கும் உழவு **இயந்திரங்களில் நேரடியாக வழங்க வேண்டும்.**
- **திண்மக்கழிவு** அகற்றும் வாகனங்கள் மறுபக்கத்திலுள்ள கால **அட்டவணைக்கேற்ப** தங்கள் பிரதேசத்திற்கு (திண்மக்கழிவு அகற்றல் **தொடர்பான இசை இசைத்த** வண்ணம்) வருகை தரும். ஏனைய நாட்களில் **கழிவுப் பொருட்களை வீதி ஓரங்களில்** வைத்தலாகாது.
- அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட 09/05/2018 ம் திகதிய 2070/11 ம் இலக்க மற்றும் 08/10/2018 திகதிய 2092/6 ம் இலக்க நியமத்துணை விதிகளுக்கு அமைவாகவும் பிரதேச சபையின் 49ம் அமர்வின் தீர்மான இலக்கம் 7 ற்கு அமைவாகவும் மக்கள் திண்மக்கழிவுகளை தரம்பிரித்து வழங்கவேண்டுமென்பது கட்டாயமானதொன்றாகும்.
- இவ் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக இணங்கி செயற்படுமாறு கேட்டுக்கொள்வதுடன் இவ் ஒழுங்கு விதிகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தொடர்புகளுக்கு :- 07 66 44 99 19**

**வலிகாமம் மேற்கு பிரதேச சபையின்**
**திண்ம கழிவகற்றும் உழவு இயந்திரத்தின் சேவைக்கான**
**கால அட்டவணை (01-05-2022 தொடக்கம்)**

| கிழமை | வட்டார இலக்கம் | வட்டார பெயர் | கிராம சேவையாளர் பிரிவு | 7 நாட்கள் விசேட சேவை |
|---|---|---|---|---|
| திங்கள் | 01 | சுழிபுரம் மேற்கும் மத்தியும் | J/172, J/173 | |
| | 02 | சுழிபுரம் கிழக்கு | J/174 | |
| | 03 | பண்ணாகம் பனிப்புலம் | J/175, J/176 | |
| செவ்வாய் | 04 | பொன்னாலை | J/170 | தினமும் |
| | 05 | தொல்புரம் கிழக்கு, மேற்கு | J/168, J/169 | |
| | 08 | மூளாய் | J/171 | • சுழிபுரம் சந்தியிலிருந்து சங்கானை |
| புதன் | 06 | வட்டுக்கோட்டை கிழக்கும் சித்தன்கேணியும் | J/157, J/177 | |
| | 09 | வட்டுக்கோட்டை வடக்கும் மேற்கும் | J/158, J/167 | |
| | 12 | வட்டுக்கோட்டை தெற்கும் தென்மேற்கும் | J/165, J/166 | • சித்தன்கேணியில் இருந்து வட்டுக்கோட்டை சந்தி |
| வியாழன் | | விசேட தேவை | | |
| வெள்ளி | | விசேட தேவை | | |
| சனி | 11 | சங்கரத்தை | J/159 | |
| | 13 | அராலி மேற்கும் மத்தியும் | J/160, J/161 | |
| | 14 | அராலி தெற்கு | J/162 | |
| | 15 | அராலி கிழக்கும் வடக்கும் | J/163, J/164 | |
| ஞாயிறு | 7 | சங்கானை மேற்கும், மத்தியும் | J/179, J/181 | |
| | 10 | சங்கானை கிழக்கும், தெற்கும் | J/178, J/180 | |

**வலிகாமம் மேற்கு பிரதேச சபை**
**சுழிபுரம்**

- திண்மக்கழிவகற்றல் முறைப்பாடுகள் தொடர்பான WhatsApp group Number - 0766449919

## ➢ விசேட செயற்திட்டங்கள்

### 1. வாசிப்பு மாதம் 2022 …………….

- வருடாந்த தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பிரதேச சபையால் 4 உப அலுவலக பகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் இரத்ததான நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. 22.12.2022 ஆம் திகதி காலை 9.00 மணி தொடக்கம் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.





- தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி நூலகங்களால் முன்னெடுக்கப்பட்ட பாடசாலை மாணவர்களிற்கான கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, பொது அறிவுப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களிற்கான பரிசில்கள் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டது. 28.12.2022 ஆம் திகதி குறித்த நிகழ்வு தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றதுடன் மாணவர்களின் கலைநிகழ்வுகள், விவாத மன்றம் போன்ற நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.







### 3. உள்ளூராட்சி வாரம் 2022………………

- 2022 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு தற்கால பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில் உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கும் வகையில் விவசாயிகளை ஊக்குவிக்க வீட்டுத்தோட்ட பயிர்கள் பிரதேச செயலரினால் உறுதிப்படுத்தப்பட்ட 250 பயனாளிகளிற்கு 10.01.2023 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டது. அத்துடன் குறித்த நிகழ்வில் அனுபவமிக்க சிறந்த உள்ளூர் விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.
-  







## 4. வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்.............

- வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட குடும்பங்களுக்கு சுகாதாரப்பொதி வழங்கப்பட்டதன் சில பதிவுகள்.
- வட்டார ரீதியில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக்கோட்டிற்குட்பட்ட 50 சிறுவர்கள், 50 முதியவர்களிற்கு சுகாதாரப் பொதி அவர்களது வீடுகளிற்கு சென்று வழங்கி வைக்கப்பட்டது.







## 5. இலைக்கஞ்சி வழங்கல் திட்டம்..........

- தற்கால பொருளாதார சூழ்நிலையில் மாணவர்களின் ஊட்டச்சத்து என்பது கல்வி முன்னேற்றத்தில் மிகவும் தாக்கம் செலுத்தும் ஒன்றாக உள்ளமையால் வலிகாமம் மேற்கு பிரதேசசபையும் ஆயர்வேத பாதுகாப்பு சபையும் இணைந்து முன்பள்ளி மாணவர்களிற்கு இலைக்கஞ்சி வழங்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. குறித்த செயற்பாடு தொடர்ச்சியான முறையில் மாதாந்தம் இடம்பெற இருக்கின்றது. 13.12.2022 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.








➢ **விசேட செயற்திட்டங்கள்.**

## 1. பெண் உறுப்பினர்களிற்கான மூலோபாய உதவித்திட்டம்.

- CDLG திட்டத்தின் கீழ் சபையின் பெண் உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்பட்ட 100 பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கு 0.8 மில்லியன் ரூபாவில் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்குமுகமாக வீட்டுத்தோட்ட பயிர்களான கத்தரி, வெண்டி, மிளகாய், தக்காளி, கறிமிளகாய் ஆகியன வழங்கி வைக்கப்பட்டன.
- குறித்த நிகழ்வு 02.12.2022 பிற்பகல் 2.00 மணியளவில் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.







# 3. வருடத்தின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 ஐந்தொகை

| Account Code கணக்குக் குறியீடு | | Description விபரம் | Note குறிப்பு | 31/12/2021 | 31/12/2022 |
|---|---|---|---|---|---|
| | | | | Rs.Cts ரூபா.ச | Rs.Cts ரூபா.ச |
| | | **Fixed Assets - நிலையான சொத்துக்கள்** | | | |
| 1 | 110 | Fixed Assets - நிலையான சொத்துக்கள் | 1 | **245,325,314.59** | **273,685,327.10** |
| 2 | | **CURRENT ASSETS - நடைமுறைச் சொத்து** | | | |
| | 120 | Stocks/Stores - இருப்புக்கள்/பண்டகசாலை | 2 | 1,199,986.14 | 2,645,311.70 |
| | 130 | Loans for Utility Services பயன்பாட்டுச்சேவைகளுக்கான கடன் | 3 | - | |
| | 140 | Staff Loans பதவியினர் கடன்கள் | | 9,093,654.00 | 9,807,682.00 |
| | 150 | Recoverable Utility Services அறவிடற்பாலதான பயன்பாட்டுச் சேவைகள் | 4 | - | - |
| | 160 | Revenue Debtors அரசிறைக் கடனாளிகள் | 5 | 21,206,068.33 | 20,027,793.40 |
| | 170 | Payment in Advances முதற்கொடுப்பனவுகள் | 6 | 818,914.54 | 1,960,317.67 |
| | 180 | Investments முதலீடுகள் | 7 | 98,868,824.51 | 105,002,201.27 |
| | 190 | Cash / Bank காசு/வங்கி | 8 | 61,682,081.24 | 67,699,531.23 |
| | | **Total Current Assets - மொத்த நடைமுறைச் சொத்து** | | **192,869,528.76** | **207,142,837.27** |
| 3 | | **Less: CURRENT LIABILITIES கழிக்க: நடப்புப் பொறுப்பு** | | | |
| | 230 | Creditors கடன் வழங்குனர் | 9 | 16,890,763.12 | 28,630,304.05 |
| | 240 | Receipts in advance முற்பணப் பெறுகைகள் | 10 | - | - |
| | 250 | Refundable Deposits மீளளிக்கப்படாத வைப்புப் பணங்கள் | 11 | 11,052,686.47 | 12,956,637.74 |
| | | **Total Current liabilities மொத்த நடைமுறைப் பொறுப்பு** | | 27,943,449.59 | 41,586,941.79 |
| 4 | | **செயற்படும் மூலதனம்/ Working Capital (2-3)** | | 164,926,079.17 | 165,555,895.48 |
| | | **தேறிய சொத்துக்கள்/ Net Assets (1+4)** | | **410,251,393.76** | **439,241,222.58** |
| | | நிதியளிக்கப்பட்ட வழி/Financed By | | | |
| | 210 | Accumulated fund and Reserves திரண்ட நிதியும் ஒதுக்கங்களும் | 12 | 406,388,017.78 | 437,106,532.65 |
| | 220 | Loan Capital (Note 13) கடன் மூலதனம் | 13 | 3,863,375.98 | 2,134,689.93 |
| | | **Total** | | **410,251,393.76** | **439,241,222.58** |

………….. ……………………………… …….. …………………

திகதி அபிவிருத்தி உத்தியோகத்தர் செயலாளர்

### 3.2 வருமானக் கூற்று

| | நிகழ்ச்சித்திட்டம் 1 | நிகழ்ச்சித்திட்டம் 2 | நிகழ்ச்சித்திட்டம் 3 | நிகழ்ச்சித்திட்டம் 4 | நிகழ்ச்சித்திட்டம் 5 | நிகழ்ச்சித்திட்டம் 6 | மொத்தத் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | பொது நிர்வாகம் | சுகாதார சேவைகள் | பௌதிக திட்டமிடல் வீதிகள் காணிகள் கட்டிடங்கள் | தண்ணீர் சேவை | வேறுபயன் பாட்டுச் சேவைகள் | நலன்புரிச் சேவைகள் | |
| **1. மீண்டுவரும் வருமானம்** | | | | | | | |
| (10) வீதவரிகளும்,வரிகளும் | 8458827.51 | 6000.00 | 0.00 | 2229460.00 | 0.00 | 0.00 | **10694287.51** |
| (20) வாடகைகள் | 0.00 | 0.00 | 636325.00 | 63900.00 | 20260666.00 | 0.00 | **20960891.00** |
| (30) உரிமைக் கட்டணங்கள் | 194638.00 | 2244272.22 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | **2438910.22** |
| (40) சேவைகளுக்கான கட்டணங்கள் | 334500.00 | 1038764.22 | 88810.00 | 0.00 | 0.00 | 9052.00 | **1471126.22** |
| (50) பற்றாணைச் செலவுகள், குற்றப்பணங்கள் தண்டங்கள் | 7165145.00 | 68120.93 | 11100.00 | 0.00 | 80840.00 | 1945.00 | **7327150.93** |
| (60) ஏனைய வருமானம் | 43403365.21 | 101500.00 | 332544.00 | 852126.00 | 32000.00 | 65400.00 | **44786935.21** |
| (70) அரசிறை மானியங்கள் | 30153610.08 | 9512300.14 | 7556791.41 | 3118883.79 | 0.00 | 2898822.12 | **53240407.54** |
| **மொத்த வருமானம்** | **89710085.80** | **12970957.51** | **8625570.41** | **6264369.79** | **20373506.00** | 2975219.12 | **140919708.63** |
| **2. மீண்டுவரும் செலவினங்கள்** | | | | | | | |
| (01) ஆளுக்குரிய வரும்படிகள் | 30201882.15 | 19620931.86 | 8186559.36 | 3176712.49 | 0.00 | 2108822.12 | **63294907.98** |
| (02) பயணச் செலவுகள் | 48490.00 | 23110.00 | 0.00 | 9450.00 | 0.00 | 0.00 | **81050.00** |
| (03) வழங்கு பொருட்களும் தேவைப் பொருட்களும் | 1440356.28 | 3856565.23 | 753692.67 | 2577504.16 | 0.00 | 464144.22 | **9092262.56** |
| (04) மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பேணுதலும் | 1545264.74 | 2331043.79 | 15773183.61 | 3892377.67 | 929715.65 | 32690.00 | **24504275.46** |
| (05) ஏற்றியிறக்கல்,தொடர்பிணைப்பு பயன்பாட்டுச் சேவை மற்றும் பிறசேவைகள் | 2896953.93 | 333593.19 | 1080.00 | 42963.59 | 156922.38 | 63524.39 | **3495037.48** |
| (06) வட்டிக் கொடுப்பனவுகள், பங்குலாபங்கள்,மிகைவிதியங்கள் | 126552.11 | 190000.00 | 20000.00 | 0.00 | 0.00 | 908465.00 | **1245017.11** |
| (07) மானியங்கள்,உதவுதொகைகள், உதவிப்பணங்கள் | 396000.00 | | | 4000.00 | 1000.00 | 0.00 | **401000.00** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (08) ஓய்வூதியங்கள் இளைப்பாற்று நயங்கள், பணிக்கொடைகள் | 82786.88 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | **82786.88** |
| **மொத்த மீண்டுவரும் செலவினம்** | **36738286.09** | **26355244.07** | **24734515.64** | **9703007.91** | **1087638.03** | **3577645.73** | **102196337.47** |
| **3. மீண்டுவரும் செலவினத்துக்கு மேலான வருமான மிகை** | **52971799.71** | **-13384286.56** | **-16108945.23** | **-3438638.12** | **19285867.97** | **-602426.61** | **38723371.16** |
| **4. 8. மூலதனப் பெறுகைகள்** | | | | | | | |
| (8-1) மானியங்கள் | 0.00 | 0.00 | 13412000.00 | 0.00 | 0.00 | 0.00 | **13412000.00** |
| (8-2) மூலதனக் கடன் | | | | | | | **0.00** |
| (8-4) ஏனையவை | | | | | | | **0.00** |
| **மொத்த மூலதனப் பெறுகைகள்** | **0.00** | **0.00** | **13412000.00** | **0.00** | **0.00** | **0.00** | **13412000.00** |
| **5. வருமான மிகையினதும் மூலதனப் பெறுகைகளினதும் மொத்தம் அதாவது (3+4)** | **52971799.71** | **-13384286.56** | **-2696945.23** | **-3438638.12** | **19285867.97** | **-602426.61** | **52135371.16** |
| **6. ஆக்கப் பொருட் செலவினம்** | | | | | | | |
| 09 ஆக்கப் பொருட்செலவுகள் | 2442405.00 | 192619.00 | 32664616.44 | 19500.00 | 0.00 | 321503.00 | **35640643.44** |
| **ஆக்கப் பொருட் செலவின மொத்தம்** | 2442405.00 | 192619.00 | 32664616.44 | 19500.00 | 0.00 | 321503.00 | **35640643.44** |
| 7. **மீதி** (5-6) | **50529394.71** | **-13576905.56** | **-35361561.67** | **-3458138.12** | **19285867.97** | **-923929.61** | **16494727.72** |
| **8. மாற்றப்பட்டது** | | | | | | | |
| ஒதுக்கங்கள் | | | | | | | **16,400,000.00** |
| திரண்ட நிதி | | | | | | | **94,727.72** |

………………. ………………………………… …….. …………………

திகதி அபிவிருத்தி உத்தியோகத்தர் செயலாளர்

## 3.3 காசுப்பாய்ச்சல் கூற்று

| | | |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| **மீண்டுவரும் செலவினத்துக்கு மேலான வருமான மிகை** | | 38,723,371.16 |
| முன்னையகால விடயங்களுக்கான சீராக்கம் | | (5,990,910.76) |
| தொழிற்படு மூலதன மாற்றத்துக்கு முன் மீண்டுவரும் செலவினங்களுக்கு எஞ்சிய வருமான குறைவு | | 32,732,460.40 |
| **தொழிற்படு மூலதனம் மீதான மாற்றங்கள்** | | |
| களஞ்சிய பொருள்கள் | (1,445,325.56) | |
| பதவியினர் கடன் | (714,028.00) | |
| முற்பணக் கொடுப்பனவுகள் | (1,141,403.13) | |
| சில்லறைக்கடன் பெறுநர் | 1,178,274.93 | |
| சில்லறைக் கடன் வழங்குனர் | 11,739,540.93 | |
| மீளளிக்கப்படற்பாலதான வைப்புக்கள் | 1,903,951.27 | 11,521,010.44 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசு உருவாக்கம்** | | 44,253,470.84 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மீதான காசுப்பாய்ச்சல்** | | |
| ஆக்கப்பொருட் செலவீடுகள் | (35,640,643.44) | (35,640,643.44) |
| கடன் மூலதனம் | (1,728,686.05) | |
| நிலையான வைப்பு | (5,474,622.41) | |
| ஆழ்நிதி | (658,754.35) | |
| மூலதன அபிவிருத்தி ஒதுக்கம் | (8,145,314.60) | (51,648,020.85) |
| மூலதனப் பெறுகைகள் | 13,412,000.00 | 13,412,000.00 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மீதான காசுப்பாய்ச்சல்** | | (38,236,020.85) |
| **காசும் காசுக்கு சமனானவையினதும் தேறிய குறைவு** | | 6,017,449.99 |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமனானவையும் | | **61,662,987.01** |
| **வருட இறுதிக் காசும் காசுக்குச் சமனானவையும்.** | | **67,680,437.00** |

……………………….. ………………………………… .. …………………

திகதி அபிவிருத்தி உத்தியோகத்தர் செயலாளர்

## 3.4 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } என்பீஎல்ஜி/ஜேஎவ்/எ/விடபிள்யூபிஎஸ்/05/2022 ඔබේ අංකය / உமது இல. / Your No. } திகதி / Date } 17 மே 2023

வலிகாமம் மேற்கு பிரதேச சபை
23 MAY 2023
சுழிபுரம்
கிடைக்கப்பெற்றது

செயலாளர்
வலிகாமம் மேற்கு பிரதேச சபை

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(I) உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

(i) சபையினால் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருந்த 02 வேலைத்திட்டங்கள், 2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருந்த 04 வேலைத்திட்டங்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருந்த 02 வேலைத்திட்டங்கள் ஆகியன செலவினமாக காட்டப்பட்டிருந்த போதிலும் நடைமுறையல்லாச் சொத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருக்காமையினால் நிதிக்கூற்றுகளில் ரூபா 5,793,997 இனால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் மூலதன அரசிறை உதவு தொகை என்பன குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டில் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த 02 அபிவிருத்தி வேலைகளிற்கு ரூபா 17,301,763 மூலதனச்செலவு ஏற்பட்டிருந்த போதிலும் நடைமுறையல்லாச் சொத்திற்குள் ரூபா 16,974,717 மட்டுமே உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் ரூபா 327,046 இனால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் மூலதன அரசிறை உதவு தொகை என்பன குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(iii) மீளாய்வாண்டில் சபையினால் ரூபா 24,070,379 ஆன 08 வேலைத்திட்டங்களானது நிறைவேற்றப்பட்டிருக்காத போதிலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் நடப்பு பொறுப்புக்கள் அதிகரித்தும் வருமான மிகை குறைத்தும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) கணக்காய்வுச்சான்றின்மை

(i) மீளாய்வாண்டில் பிரதியீட்டு ஒதுக்கம் ரூபா 400,000 மற்றும் ஆழ்நிதி உதவுத்தொகை ரூபா 7,131,134 ஆகியவை கடந்த 10 வருடங்களிற்கு மேலாக மீதியாக பேணப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றுக்கான கணக்காய்வுச் சான்றுகள் எதுவும் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஆதனவரி ஆரம்ப நிலுவையாக ரூபா 17,546,172 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த பெறுமதி எந்த

Page 2 of 12

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

ஆண்டுகளுக்குரியது என கணக்காய்வின் போது வேறுபடுத்த முடியாதிருந்ததுடன் ஆதனவரிக்கான பகுப்பாய்வு அட்டவணை மற்றும் நிலுவைகளுக்கான வயதுப்பகுப்பாய்வு என்பன நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டிலான பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

Page 4 of 12

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

1.5 ஏனைய சட்ட ரீதியான .தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 இணக்கமின்மைகள்

1.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதிகள்<br>- அத்தியாயம் XIV இன் பிரிவு 217 | | சபைக்கு பராதீனப்படுத்தப்பட்ட அல்லது சபையினால் பயன்படுத்தப்படுகின்ற காணி கட்டடங்கள் தொடர்பாக பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம்<br>- பிரிவு 158(1) | | ஆதனவரி செலுத்தத் தவறியோருக்கு பற்றாணைச் சீட்டு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

Page 5 of 12

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | | |
|---|---|---|
| (இ) பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | | |
| - 2018.01.24 ஆம் திகதிய இல 05/2008 (1) ஐ கொண்ட சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008.02.06 ஆம் திகதிய இல 05/2008 | | பிரசைகள்/ பயனாளிகள் சமவாயத்திற்கு ஏற்புடையதாக பொதுமக்கள் சேவைப்பட்டயம் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப்பிரமாணங்கள் | | |
| - இலக்கம் 571 | 1,891,620 | 06 வருடங்களிற்கு மேற்பட்ட காலங்கடந்த பாதுகாப்பு வைப்பு மற்றும் பிடிபண வைப்புப்பணம் தொடர்பாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 38,723,371 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 39,305,981 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பாக தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 10,259,872 | 10,694,288 | 10,833,887 | 17,592,083 | 9,634,872 | 10,567,590 | 10,015,743 | 17,730,683 |
| (ii) | வாடகை | 14,765,100 | 20,960,891 | 23,225,697 | 16,770 | 21,603,450 | 21,421,022 | 19,178,020 | 2,281,576 |
| (iii) | உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,941,200 | 2,438,910 | 2,438,910 | 9,500 | 1,752,000 | 1,867,370 | 1,873,920 | 9,500 |
| (iv) | ஏனைய வருமானம் | 32,548,800 | 53,585,212 | 50,395,323 | - | 19,985,600 | 40,292,307 | 39,513,536 | - |
| | | 59,514,972 | 87,679,301 | 86,893,817 | 17,618,353 | 52,975,922 | 74,148,289 | 70,581,219 | 20,021,759 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

(அ) மீளாய்வாண்டின் பட்டியலபடுத்தப்பட்ட வருமானத்திற்கும், சேகரிக்கப்பட்ட வருமானத்திற்கும் இடையே ரூபா 785,484 ஆன வேறுபாடு காணப்படுவதனால் சேகரிக்கும் செயலாற்றலில் வினைத்திறனின்மை காணப்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2021 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 70,581,219 ஆக இருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 86,893,817 ஆக அதிகரித்துள்ளமையால் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2022 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 16,312,598 இனால் அதிகரித்திருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

**வீதவரி**

1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை கட்டளை சட்டத்தின் 134(i) இற்கமைவாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களிலுள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் என்பனவற்றின் மீது அறவிடப்பட வேண்டிய ரூபா 17,529,158 ஆன ஆதனவரி நிலுவையினை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது.

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

Page 7 of 12

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதாவது மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம், அமுல்படுத்தும் கால அட்டவணை, அந்த செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி / விளைவுகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஒவ்வொரு வருமானம், செலவினத் தலைப்பின் கீழ் வருமானங்களை சேகரித்தல் மற்றும் செலவினம் தொடர்பான திட்டம் மற்றும் அவற்றின் செயலாற்றல் குறிகாட்டிகள் என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

2018 ஏப்ரல் 23 ஆந் திகதிய ச.செ.பொது/2018.61 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கு சபைகளின் ஆயத்தம் தொடர்பான பின்வரும் விடயம் அவதானிக்கப்பட்டது.

மீளாய்வாண்டில் நவீன தொழில்நுட்பவியலான புத்தாக்கத்தினை ஊக்குவிப்பதற்கான செயல்திட்டங்கள் மற்றும் கால நிலையின் தாக்கத்தால் உள்ளூர் அனர்த்த இடரினைக் குறைப்பதற்கான தந்திரோபாயங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134 ஆம் பிரிவிற்கு அமைய பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் என்பனவற்றின் சோலைவரி அறவிடுவதற்காக வருடாந்தம் சபையினால் ஆதன உரிமையாளர்களிற்கு K படிவம் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு மாறாக மீளாய்வாண்டில் சபையினால் ஆதனவரி அறவிடப்படும் சுழிபுரம் உப அலுவலகத்தினால் 10,455 ஆதனங்களிற்கும் மற்றும் வட்டுக்கோட்டை உப அலுவலகத்தினால் 5,649 ஆதனங்களிற்கும் K படிவம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சபையினால் சம்பளமற்ற விடுமுறையில் இருக்கும் ஊழியரிற்கு செலுத்தவேண்டிய ரூபா 841,160 ஆனது கடந்த ஏழு வருடங்களுக்கு மேல் நடைமுறைப்பொறுப்பாக வெளிப்படுத்தப்பட்டுவருகிறது.

(இ) மீளாய்வாண்டில் சபையின் 04 நிலையான சொத்து விடயங்களின் பேரேட்டு மீதிகளிற்கும் நிதிக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த மீதிகளிற்கும் இடையில் ரூபா 158,272,979 இனால் வேறுபாடு காணப்பட்டிருந்தது.

## 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்

(i) சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியினர் 103 ஆகவும் மீளாய்வாண்டின் உள்ளவாறான பதவியணியினர் 98 ஆகவும் காணப்படுகின்றனர்.

| | பதவியினர் மட்டம் | அனுமதிக்கப்பட்டது | உள்ளவாறானது | வெற்றிடங்கள் | மிகைகள் |
|---|---|---|---|---|---|
| 01. | சிரேஸ்ட மட்டம் | 03 | 03 | - | - |
| 02. | இரண்டாம் மட்டம் | 42 | 58 | - | 16 |
| 03. | ஆரம்ப மட்டம் | 58 | 37 | 21 | - |
| | | **103** | **98** | **21** | **16** |

(ii) சபையானது ஆரம்ப பதவியணியினர் மட்டத்தில் 21 ஊழியர்களை பற்றாக்குறையாக கொண்டுள்ளமையினால் கழிவகற்றல் சேவை,

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

Page 9 of 12

அலுவலக கடமைகள் மற்றும் ஏனைய சேவைகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்குவது அவதானிக்கப்பட்டிருந்தது.

(iii) இரண்டாம் பதவியணியினர் மட்டத்தில் 22 அபிவிருத்தி உத்தியோகத்தர்களினை மிகையாக கொண்டுள்ளமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) **ஊழியர் பிணைப்பணம்**

(i) 2017 மார்ச் 07 ஆம் திகதிய PF/01/2017 ஆம் இலக்க மாகாண நிதிச்சுற்று நிருபத்திற்கு அமைவாக சபையில் கடைமையாற்றி வரும் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 60,000 ஆன ஊழியர் பிணைப்பணம் மீளாய்வாண்டு இறுதிவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) 2017 மார்ச் 07 ஆம் திகதிய PF/01/2017ஆம் இலக்க மாகாண நிதிச்சுற்று நிருபத்திற்கு அமைவாக சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் ரூபா 15,000 ஆன பிணைப்பணமானது மீளாய்வாண்டு இறுதிவரை கொடுத்து தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

மீளாய்வாண்டில் சபையினால் 05 சந்தைகள் கேள்விகோரி வழங்கப்பட்டிருக்காமையினால் ரூபா 672,196 ஆனது சபைக்கு வருமான இழப்பாக ஏற்பட்டிருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள்

(அ) சபையின் பயன்பாட்டிலுள்ள 18 மயானக் காணிகளினை சபைக்கு உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சபையின் 15 காணிகளின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

3.5.2 வாகனப்பயன்பாடு

சபையினால் பயன்படுத்தப்படுகின்ற இழுவை நீர்த்தாங்கியினை திருத்தம் மேற்கொண்டு பயன்படுத்த கணிசமான செலவு ஏற்படும் என்பதனால் நிதிச்சுற்றறிக்கை 02/2015 இற்கமைவாக அரச சொத்துடமையிலிருந்து அகற்றுமாறு இயந்திரப் பொறியியலாளரினால் 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் திகதிய கடிதம் மூலம் சிபார்சு செய்யப்பட்டிருந்த போதும் இதுவரை அகற்றப்பட்டிருக்கவில்லை.

3.6 பெறுகைகள்

3.6.1 வழங்கல் மற்றும் சேவைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டு நெறிகள் 2006 இன் 8.9.1(ஆ) மற்றும் மாகாண நிதிச்சுற்றறிக்கை இலக்கம் PF/06/2015(ii) இன் 8.2 (b) ஆகியவற்றின் பிரகாரம் ரூபா 500,000 இனை விஞ்சுகின்ற எவையேனும் பண்டங்கள் சேவைகள் தொடர்பில் விதிமுறைப்பட்ட ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ரூபா 2,197,690 ஆன 03 வகையான பொருட்களிற்கு ஏற்றுக் கொள்ளல் கடிதம் வழங்கப்பட்டிருந்த போதிலும் வழங்குனருடன் விதிமுறைப்பட்ட ஒப்பந்தமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 134(3) இற்கு இணங்க நிதி விடயங்களுடன் சம்பந்தப்பட்ட உள்ளகக்கணக்காய்வு அறிக்கைகள் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 பாதீட்டுக்கட்டுப்பாடு

சபையின் பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையில் 106 சதவீதம் தொடக்கம் 207 சதவீதமான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்ததுடன் பாதீட்டு செலவீனத்திற்கும் உண்மை செலவீனத்திற்கும் இடையில் 74 சதவீதம் தொடக்கம் 96 சதவீதமான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன. பாதீடானது முகாமையின் ஒரு சிறந்த கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்பட்டிருக்காமையினால் இப் பாதீடு ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்பட்டிருந்தது.

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

## 4.3 தீர்த்துவைக்கப்படாதுள்ள அவதானிப்புக்கள்

2021 ஆம் ஆண்டிற்கான JAF/B/VWPS/05/21 ஆம் இலக்க 16 ஆகஸ்ட் 2022 திகதிய பொழிப்பு அறிக்கையின் 1.2 (ஆ) (ii) (iii) (iv), 1.6.1, 2.2.1 (அ) (i) (ii) (ஆ), 3.1 (இ), 3.2 (ஆ), 3.3 (ஆ), 3.5.1, 3.5.2 (ஆ) ஆகிய பந்திகள் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை.

பா.பற்குணன்
சிரேஸ்ட உதவிக்கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக

NATIONAL AUDIT OFFICE OF SRI LANKA

## 4. செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

| விசேட குறிகாட்டிகள் | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டின் சதவீதமாக(%) உள்ளபடியான வெளியீடு | | |
|---|---|---|---|
| | **100% – 90%** | **89%-75%** | **74% – 50%** |
| LDSP தடுப்புச்சுவர் அமைத்தல் யாழ் வீதி 1ம் ஒழுங்கை (விழிசுட்டி வீதி) – கட்டம் 02 | 100% | | |
| மீன்சந்தை, இறைச்சிக்கடை மற்றும் கருவாட்டுக்கடை அமைத்தல் சத்தியக்காடு சுழிபுரம். | 100% | | |
| CDLG திட்டத்தின் கீழ் பெண் உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளிற்கான வீட்டுத்தோட்ட பயிர்கள் வழங்கல். | 100% | | |
| தலைமை அலுவலகத்தில் LIFT பொருத்துதல். | 100% | | |
| அராலி கிழக்கு மீனவ வீதி புனரமைப்பு | | | 50% |

### 4.2 வருமான செயற்றிறன்

| இல | மீண்டுவரும் வருமானங்கள் | வரவு செலவுத் திட்டம் | உண்மை வருமானம் | மீதி | வீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | வீதவரிகளும் வரிகளும் | 10,259,872.00 | 10,833,886.95 | (574,014.95) | 105.59 |
| 2 | வாடகைகள் | 14,765,100.00 | 23,225,697.38 | (8,460,597.38) | 157.30 |
| 3 | உரிமக் கட்டணங்கள் | 1,941,200.00 | 2,438,910.22 | (497,710.22) | 125.64 |
| 4 | சேவைக்கான கட்டணங்கள் | 711,500.00 | 1,471,126.22 | (759,626.22) | 206.76 |
| 5 | பற்றானைச் செலவுகள் தண்டங்கள் | 4,075,800.00 | 6,587,150.93 | (2,511,350.93) | 161.62 |
| 6 | ஏனைய வருமானங்கள் | 27,761,500.00 | 42,337,045.85 | (14,575,545.85) | 152.50 |
| 7 | அரசிறை மானியங்கள் | 58,765,774.00 | 52,835,407.54 | 5,930,366.46 | 89.91 |
| 8 | மூலதன மானியம் | 13,413,000.00 | 13,412,000.00 | 1,000.00 | 99.99 |
| | **மொத்தம்** | **131,693,746.00** | **153,141,225.09** | **(21,447,479.09)** | **116.29** |

### 4.3 செலவின செயற்றிறன்

| இல | மீண்டுவரும் செலவினங்கள் | வரவு செலவுத் திட்டம் | உண்மைச் செலவு | மீதி | வீதம் |
|---|---|---|---|---|---|
| 1 | சம்பளமும் கூலிகளும் | 65,194,774.00 | 63,577,919.68 | 1,616,854.32 | 97.52 |
| 2 | பயணச்செலவுகள் | 544,000.00 | 81,050.00 | 462,950.00 | 14.90 |
| 3 | வழங்கு பொருட்களும் தேவைப் பொருட்களும் | 6,615,000.00 | 9,027,521.01 | (2,412,521.01) | 136.47 |
| 4 | மூலதனச் சொத்துகளை பழுதுபார்த்தலும் பேணலும் | 21,510,000.00 | 24,488,645.46 | (2,978,645.46) | 113.85 |
| 5 | ஏற்றியிறக்கல் தொடர் இணைப்பு பயன்பாட்டுச் சேவைகள் ஏனையசேவைகள் | 3,403,000.00 | 3,495,037.48 | (92,037.48) | 102.70 |
| 6 | வட்டிக் கொடுப்பனவுகள் பங்குலாபம் மிகையூதியங்கள் | 126,553.00 | 126,552.11 | 0.89 | 100.00 |
| 7 | மானியங்கள் உதவு தொகைகள் ஏனையவை | 1,630,000.00 | 1,519,465.00 | 110,535.00 | 93.22 |
| 8 | ஓய்வூதியங்கள் இளைப்பாற்று நயங்கள் பணிக்கொடைகள் | 71,000.00 | 82,786.88 | (11,786.88) | 116.60 |
| 9 | ஆக்கப்பொருட்செலவுகள் | 17,453,000.00 | 35,969,600.14 | (18,516,600.14) | 206.09 |
| 10 | கடன் மீளளிப்பு | 1,728,686.05 | 1,728,686.05 | - | 100.00 |
| | **மொத்தம்** | **118,276,013.05** | **140,097,263.81** | **(21,821,250.76)** | **118.45** |

# 5. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களைப் பூர்த்தி செய்யும் செயலாற்றுகை

## 5.1 அடையாளம் காணப்பட்ட உரிய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள்

| இலக்கு குறிக்கோள் | இலக்குகள் | அடைவுக் குறிகாட்டிகள் | இதுவரையிலான அடைவு முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| ஏழ்மை இன்மை | | | | | |
| பசி இன்மை | | | | ✓ | |
| நல்ல ஆரோக்கியம் | | | | ✓ | |
| தரமான கல்வி | | | | | ✓ |
| பாலின சமத்துவம் | | | | | |
| தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம் | | | | | ✓ |
| புதுப்பிக்கவல்ல மற்றும் மலிவான சக்தி | | | ✓ | | |
| நல்ல பணிகள் | | | | | ✓ |
| புதுமை மற்றும் உட்கட்டுமானம் | | | | | ✓ |
| சமமின்மையை குறைத்தல் | | | | | |
| நிலையான நகரங்கள் | | | | | |
| வளங்களை பொறுப்பான முறையில் பயன்படுத்துதல் | | | | | ✓ |
| வானிலை நடவடிக்கை | | | | | |
| கடல் வளம் பேணல் | | | | ✓ | |
| நிலத்தின் நிலையான பயன்பாடு | | | | | |
| அமைதி மற்றும் நீதி | | | | | |
| நிலையான அபிவிருத்திக்கான கூட்டமைப்பு | | | | | ✓ |

## 5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைப் பூர்த்தி செய்வதன் அடைவுகள் மற்றும் சவால்கள்

2022 இல் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி செல்வதற்கு எமது சபையால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களில் பெரும்பாலான வேலைத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டது. குறித்த வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு நிதி, ஆளணி, நாட்டின் பொருளாதார நெருக்கடி சூழ்நிலை, காலநிலை மற்றும் அரசியல் போன்ற சலால்களை எதிர்நோக்க வேண்டி இருந்தது.

பின்வரும் நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகளை அடையும் வகையில் 2022 ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகள் வினைத்திறனான வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. SDG 01 - ஏல்லா இடங்களிலும் அனைத்து வடிவங்களிலுள்ள வறுமையை ஒழித்தல்.
2. SDG 02 - விவசாயத்தை முன்னுறுத்திப பட்டினையை இல்லாதொழிப்பது உணவுப்பாதுகாப்பு மற்றும் சிறந்த ஊட்டச்சத்து தரங்களை மேம்படுத்தல்.
3. SDG 03 – அனைத்து வயதிலும் தரமான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கையை உறுதிப்படுத்தல்.
4. SDG 04– முழுமையானதும் நீதியானதுமான கல்வியை உறுதி செய்தலும் அனைவருக்கும் வாழ்நாள் பூராகவும் கற்றலுக்கான சந்தர்ப்பத்தை உறுதி செய்தலும்.
5. SDG 05 – பெண் சமத்துவத்தை அடைந்துகொள்ளுமுகமாக அனைத்து பெண்களையும் பெண் பிள்ளைகளையும் வலுவூட்டுதல்.
6. SDG 06 – அனைவருக்கும் நீர் மற்றும் துப்புரவேற்பாடு வசதிகளை வலுவாதார முகாமைத்துவத்தினூடாக உறுதிப்படுத்தல்.
7. SDG 07 - அனைவருக்கும் ஏற்கக்கூடிய நம்பகரமான நிலைபேறான மற்றும் நவீன வலுசக்தி.
8. SDG 09 – உட்கட்டமைப்பு வசதிகளை வலுவான முறையில் கட்டியெழுப்பல்.
9. SDG 13 – காலநிலை மாற்றங்களையும் அதன் விளைவுகளையும் எதிர்கொள்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல்.

# 6. மனித வளப் பக்கத் தோற்றப்பாடு

## 6.1 பதவியணி முகாமை - 2022

| Designation | Service | Grade/Class | DMS Approve d Cadre | Permanent | Vacancy |
|---|---|---|---|---|---|
| செயலாளர் | PMSO - Supra | Supra | 1 | 1 | |
| ஆயுள் வேத மருத்துவ உத்தியோகத்தர் | SLAYMS | III/II/I | 2 | 2 | |
| உள்ளூராட்சி உதவியாளர் | LGAS service | III/II/I | 1 | 1 | |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | Development Officer's service | III/II/I | 6 | 13 | |
| வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர் | Development Officer's service | III/II/I | 0 | 15 | |
| நூலகர் | SLGLS | III/II/I | 4 | 1 | 3 |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர்(Civil) | SLTS | III/II/I | 4 | 4 | |
| முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | MSO | III/II/I | 22 | 21 | 1 |
| வருமான பரிசோதகர் | Dept | III/II/I | 4 | 3 | 1 |
| வேலை வெளிக்கள மேற்பார்வையாளர் | Dept | III/II/I | 1 | - | 1 |
| சுந்தை மேற்பார்வையாளர் | Dept | III/II/I | 1 | - | 1 |
| சுகாதார மேற்பார்வையாளர் | Dept | III/II/I | 1 | - | 1 |
| சாரதி | Dept | III/II/I/Spl | 5 | 5 | |
| மின்னியலாளர் | Dept | III/II/I/Spl | 1 | 1 | |
| மருத்துவக் கலவையாளர் | Dept | III/II/I/Spl | 2 | 1 | 1 |
| KKS | OES | III/II/I/Spl | 7 | 5 | 2 |
| காவலாளி | OES | III/II/I/Spl | 5 | 3 | 2 |
| காவலாளி (தனிப்பட்ட) | OES | III/II/I/Spl | 1 | 1 | |
| சுகாதாரத் தொழிலாளி | Dept | III/II/I/Spl | 15 | 10 | 5 |
| சுகாதாரத் தொழிலாளி (தனிப்பட்ட) | Dept | III/II/I/Spl | 1 | 1 | |
| நூலகப் பரிசோதகர் | Dept | III/II/I/Spl | 4 | 3 | 1 |
| வேலைவெளிக்கள தொழிலாளி | Dept | III/II/I/Spl | 13 | 6 | 7 |
| நீர் இயந்திர அறை பாதுகாவலர். | Dept | | 2 | 1 | 1 |

## 6.2 நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையில் 04 உப அலுவலகங்கள் உள்ள நிலையில் 03 வருமானப்பரிசோதகர்களே உள்ளமையினால் இரண்டு உப அலுவலக பிரிவுகளில் ஒரு வருமானப்பரிசோதகர் ஈடுபடுவதனால் வருமான ஈட்டுகை பாதிப்படைகின்றது. மேலும் சுகாதாரத்தொழிலாளர்கள், வேலை வெளிக்களத்தொழிலாளர்களிற்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி 29 ஆகும். எனினும் தற்போதுள்ள ஆளனியினரின் எண்ணிக்கை 17 ஆக காணப்படுவதனால் திண்மக்கழிவு தரம்பிரித்தல் செயற்பாட்டிற்குரிய ஆளணி பற்றாக்குறையாக உள்ளது.

### 6.3 பதவியணியினரின் திறன் விருத்தி

| நிகழ்ச்சியின் பெயர் | பயிற்சி அளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை | நிகழ்ச்சியின் காலப்பகுதி | ஒட்டுமொத்த முதலீடு(ரு) | | நிகழ்ச்சியின் தன்மை | வெளியீடு/பெற்ற அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| E governance | 15 | 14,15.02.2022<br>07.03.2022 | | | உள்நாடு | அரசின் புதிய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அறிதல். |
| Sharpening leadership skills key personnel in local government | 00 | 20.01.2022 | | | உள்நாடு | தலைமைத்துவ பண்பு |
| Preparation of final accounts financial management division | 08 | 04.03.2022<br>25,26.10.2022 | | | உள்நாடு | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அறிவு |
| Physical planning & Revenue enhancement physical planning | 07 | 09,10.05.2022 | | | உள்நாடு | திட்டமிடல் மற்றும் வருமான அறவீடு தொடர்பான அறிவு |
| Council procedure & committee system of local authority | 06 | 10.06.2022 | | | உள்நாடு | சபை நடவடிக்கைகள் தொடர்பான அறிவு |
| Lows Relevant to building plans approval in UDA Physical planning division | 13 | – | | | உள்நாடு | கட்டட அனுமதி தொடர்பிலான நடைமுறைகள் ஒழுங்குகள் தொடர்பான அறிவு |
| Issuing Environment license & legal Procedure | 00 | – | | | உள்நாடு | சுற்றாடல் உரிமம் மற்றும் சட்டக்கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவு |
| Introduction IT system to local authorities in the northern Province | 04 | 22.02.2022<br>29,30.03.2022 | | | உள்நாடு | IT தொடர்பான அறிவு |
| Procurement Procedure | 06 | 19.01.2022<br>20.01.2022 | | | உள்நாடு | பெறுகை நடைமுறைகள் தொடர்பான அறிவு |
| Project Management | 05 | 29.07.2022<br>22,23.09.2022 | | | உள்நாடு | கருத்திட்ட வடிவமைப்புக்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல்கள் |
| Preparation of Personal File | 04 | 28.09.2022<br>13.09.2022<br>20.09.2022<br>27.09.2022 | | | உள்நாடு | தனிநபர் கோவை பேணல் தொடர்பான அறிவு |
| Public Partnership for Local Government | 02 | 09.03.2022<br>10.03.2022 | | | உள்நாடு | பொதுமக்களுடனான உள்ளூராட்சியின் பங்களிப்பு |
| Environment Protection License Procedure | 03 | 13.10.2022 | | | உள்நாடு | சுற்றுச்சூழல் ொதடர்பான அறிவு |

## 7. இணக்கப்பாட்டு அறிக்கை

| தொடர்புடுத்தப்பட வேண்டிய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கப்பாடானது/ இணக்கப்பாடற்றது) | இணக்கப்பாடற்றது எனின் அதற்கான சுருக்கம் | இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரிசெய்யும் நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| **1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்** | | | |
| (1.1) மீளாய்வு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் உரிய தினத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| **2. கணக்காய்விற்கு பதிலளித்தல்** | | | |
| (2.1) கணக்காய்வாளர் நாயகத்தினால் குறித்துரைக்கப்பட்ட திகதியில் கணக்காய்வுக் கேள்விக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது | இணக்கப்பாடானது | | |
| (2.2) முன்னைய வருடங்களில் கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வுக் கேள்விகளில் கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்டு குறைபாடுகள் சரி செய்யப்பட்டுள்ளன | இணக்கப்பாடானது | | |
| **3. திட்டங்கள்** | | | |
| (3.1) நிறுவனத்தின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது | இணக்கப்பாடானது | | |
| (3.2) மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுத் திட்டத்திற்கு உரிய தினத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. | இணக்கப்பாடானது | | |
| (3.3) மீளாய்வாண்டிற்கான வரவு செலவுத்திட்டத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது | இணக்கப்பாடானது | | |
| (3.4) வருடாந்த பெறுகைத் திட்டம் உரிய தினத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. | இணக்கப்பாடானது | | |
| **4. கட்டண நிருவாகம்** | | | |
| (4.1) கட்டணம் அறவிடப்படும் ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை விலைமதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (4.2) மீளாய்வாண்டிற்கான விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ள வருமானத்தில் 70% அந்த வருடத்திலேயே சேகரிக்கப்பட்டுள்ளது. | இணக்கப்பாடானது | | |
| (4.3) நிலுவையிலுள்ள கட்டணங்களை அறவிடுவதற்காக அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது. | இணக்கப்பாடானது | | |

| | | | |
|---|---|---|---|
| **5. வாடகை நிருவாகம்** | | | |
| (5.1) வருடாந்தம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து ஆதனங்களும் (இறைச்சிக் கடைகள்/மீன் கடைகள்/பொது வாரச் சந்தைகள்) மீளாய்வாண்டில் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (5.2) வருடாந்தம் வாடகைக்கு வழங்கப்படும் ஆதனங்கள் தொடர்பில் ஒப்பந்தங்கள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (5.3) வருடாந்தம் வாடகைக்கு வழங்கப்படும் ஆதனங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய வரிகள் அறவிடப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (5.4) நிலுவையாகவுள்ள தொகைகளை அறவிடுவதற்காகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடற்றது | Covid – 19 தொற்றுபரவல் | நடுக்கட்டல் உத்தியோகத்தர் மூலமும், நடமாடும் சேவை மூலமும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (5.5) நீண்ட காலத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட வேண்டியிருந்த ஆதனங்கள் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (5.6) நீண்ட காலத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட வேண்டியிருந்த ஆதனங்கள் தொடர்பில் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| **6. வியாபார வரிகள் மற்றும் விற்பனை அனுமதிபத்திர நிர்வாகம்.** | | | |
| (6.1) மீளாய்வாண்டில் வியாபார வரிகளையும் விற்பனை அனுமதிப்பத்திரக் கட்டணங்களையும் சேகரிப்பதற்கு மதிப்பாய்வொன்று நடாத்தப்பட்டுள்ளது. | இணக்கப்பாடானது | | |
| (6.2) அனுமதிப்பத்திரம் பெற்றிராத வியாபார நிலையங்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| **7. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள்** | | | |
| (7.1) ஆகக் குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் குறித்த வருடத்தினுள் நடாத்தப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| **8. வங்கி கணக்கு முகாமை** | | | |
| (8.1) உரிய தினத்தில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சான்றுப்படுத்தி | இணக்கப்பாடானது | | |

| | | | |
|---|---|---|---|
| கணக்காய்வுக்காகத் தயார்படுத்தப்பட்டுள்ளன. | | | |
| (8.2) மீளாய்வாண்டில் அல்லது அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து வந்துகொண்டிருந்த செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. | இணக்கப்பாடானது | | |
| (8.3) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மற்றும் திட்டமிடப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களிற்கு இணங்க நடவடிக்கைகள் எடுத்து அந்த மீதிகளுக்கு ஒரு மாத காலத்தினுள் தீர்வு காணப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| **9. சொத்து முகாமை** | | | |
| (9.1) அனைத்துச் சொத்துக்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. | இணக்கப்பாடற்றது | | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (9.2) அனைத்துச் சொத்துக்களினதும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | இணக்கப்பாடானது | | |
| (9.3) அனைத்துச் சொத்துக்களும் கையகப்படுத்தப்பட்டுள்ளன. | இணக்கப்பாடற்றது | சில சொத்துக்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. | கையகப்படுத்தப்படாத சொத்துக்களுக்கு கையகப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (9.4) 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு இணங்க, பொருட் தொகை மதிப்பாய்வுகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் குறித்த அறிக்கைகள் உரிய தினத்தில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (9.5) வருடாந்த பொருட் தொகை மதிப்பாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட மிகைகள்,பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய சிபாரிசுகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (9.6) கழித்தொதுக்கப்பட்ட பொருட்கள் நி.பி. 772 இற்கு இணங்க அகற்றப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| **10. வாகன முகாமை** | | | |
| (10.1) தொகுதியிலுள்ள வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்தச் சுருக்க அறிக்கைகள் | இணக்கப்பாடானது | | |

| | | | |
|---|---|---|---|
| தயாரிக்கப்பட்டு உரிய தினத்தில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | | | |
| (10.2) வாகனங்கள் கழித்து ஒதுக்கப்பட்டு 06 மாதங்களுக்கு குறைவான காலத்தில் அகற்றப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (10.3) வாகனச் சம்பவத் திரட்டுப் புத்தகங்கள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (10.4) ஒவ்வொருவாகன விபத்து தொடர்பிலும் நி.பி. 103, 104, 109, 110 என்பவற்றுக்கு இணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன | இணக்கப்பாடானது | | |
| (10.5) 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க,வாகனங்களில் எரிபொருள் தகனம் மீளப் பரிசோதிக்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (10.6) நிறுவனத்தில் வாகனப் பராமரிப்பு ஆவணமொன்று பேணப்பட்டு வருகின்றது. | இணக்கப்பாடானது | | |
| (10.7) நிறுவனத்தில் எரிபொருள் ஆவணமொன்று பேணப்பட்டு வருகின்றது. | இணக்கப்பாடானது | | |
| **11. பதவியணி முகாமை** | | | |
| (11.1) அனுமதியளிக்கப்பட்ட பதவியணி வரையறையினுள் பதவியணியினர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (11.2) பதவியணியின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் கடமைப் பட்டியல்கள் எழுத்து மூலம் வழங்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (11.3) 2017.09.20 ஆம் திகதிய 04/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கைக்கு இணங்க அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. 20.09.2017 | இணக்கப்பாடானது | | |
| **12. மிகப் பிந்திய இற்றைப்படுத்தல்களுடன் ஏடுகளையும் பட்டியல்களையும் பேணி வருதல்.** | | | |
| **(12.1)** காணிகள் மற்றும் கட்டடப் பட்டியல். | இணக்கப்பாடற்றது | | |
| (12.2) நிலையான சொத்துக்களின் பதிவேடு. | இணக்கப்பாடானது | | |

| | | | |
|---|---|---|---|
| (12.3) ஒப்பந்தக்காரர்களின் பதிவேடு. | இணக்கப்பாடானது | | |
| (12.4) கணக்காய்வுக் கேள்வி ஆவணங்கள். | இணக்கப்பாடானது | | |
| (12.5) காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஆவணங்கள். | இணக்கப்பாடானது | | |
| (12.6) பொருட் பட்டியல். | இணக்கப்பாடானது | | |
| (12.7) நுகர்வோர் பண்டப் பட்டியல். | இணக்கப்பாடானது | | |
| (12.8) நட்டங்கள் தொடர்பான பதிவேடு. | இணக்கப்பாடானது | | |
| (12.9) அடிக்கட்டைப் புத்தகப் பதிவேடுகள். | இணக்கப்பாடானது | | |
| (12.10) முற்பணப் பதிவேடுகள். | இணக்கப்பாடானது | | |
| (12.11) கைத்தொழில்/ வியாபார வரிப் பதிவேடு. | இணக்கப்பாடானது | | |
| (12.12) கடன் பெற்றோர் பதிவேடு. | இணக்கப்பாடானது | | |
| (12.13) கடன் உரிமையாளர் பதிவேடு. | இணக்கப்பாடானது | | |
| (12.14) கேள்விப்பத்திரச் சபைத் தீர்மானப் பதிவேடு. | இணக்கப்பாடானது | | |
| (12.15) வீதி விளக்குப் பதிவேடு. | இணக்கப்பாடானது | | |
| (12.16) அளவைப் புத்தகம். | இணக்கப்பாடானது | | |
| (12.17) வீதிப்பதிவேடு. | இணக்கப்பாடானது | | |
| (12.18) காணித்துண்டுப் பதிவேடு. | இணக்கப்பாடற்றது | | |
| (12.19) கட்டட விண்ணப்பப் பதிவேடு. | இணக்கப்பாடானது | | |
| (12.20) இணக்கப்பாட்டு மதிப்பீட்டுப் பதிவேடு. | இணக்கப்பாடானது | | |
| **13. கழிவுப் பொருள் முகாமை** | | | |
| (13.1) தேசிய கொள்கைகளுக்கு இணங்க கழிவுப் பொருள் முகாமைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | இணக்கப்பாடானது | | |
| (13.2) சபையின் எல்லைக்குள் குப்பைகள் சேகரிக்கப்பட்டு வேறுபடுத்தப்பட்டுள்ளன. | இணக்கப்பாடற்றது | | |
| **14. சுற்றாடல் செயற்பாடுகள்** | | | |
| (14.1) பிரதேசத்தினுள் ஒழுங்கின்றி குப்பைகளை அகற்றுவதனால் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. | இணக்கப்பாடற்றது | பாதிப்பு ஏற்படாத வகையில் கழிவு முகாமைத்துவ செயற்பாடு நடைபெற்று வருகின்றது | |
| (14.2) பிரதேசத்தின் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களினால் சுற்றாடலுக்கு ஏற்படும் அழிவைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |

| | | | |
|---|---|---|---|
| **15. துணைச் சட்டங்கள்** | | | |
| (15.1) மாநகர சபைகள்,பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் பிரிவு/நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவு/ பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆம் பிரிவு என்பவற்றுக்கு இணங்க துணைச் சட்டங்கள் இயற்றப்பட வேண்டிய நோக்கங்களுக்காக துணைச்சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (15.2) மேலே குறிப்பிட்ட துணைச் சட்டங்கள் தொடர்பில் சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (15.3) அச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | இணக்கப்பாடானது | | |
| **16. பொது மக்களுக்குத் தகவல்கள் வழங்குதல்.** | | | |
| (16.1) தகவலறியும் சட்டத்திற்கு இணங்க தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு தகவல் வழங்குவதற்கான உரிய பதிவேடு ஒன்று பேணப்பட்டு வந்துள்ளது. | இணக்கப்பாடானது | | |
| (16.2) நிறுவனம் தொடர்பான தகவல்கள் அதன் இணையதளத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளதுடன் இணைய தளத்தின் ஊடாக அல்லது மாற்று வழிகளின் ஊடாக நிறுவனம் தொடர்பில் பாராட்டுவதற்கு/குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதற்கு பொது மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | முகப்புத்தகம், சமூக வலைத்தள குழுக்கள் உருவாக்கப்பட்டு முறைப்பாடுகளை தெரிவிக்கவும், பாராட்டுவதற்கும் வசதி அளிக்கப்பட்டுள்ளது. | இணையத்தளம் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (16.3) தகவலறியும் சட்டத்தின் 08 மற்றும் 10 ஆம் பிரிவுகளுக்கு இணங்க வருடத்திற்கு இரு முறை அல்லது வருடத்தில் ஒரு முறை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |

| | | | |
|---|---|---|---|
| **17. கட்டட வரைபடங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல்** | | | |
| (17.1) சபைக்கு கிடைக்கப்பெறும் அனைத்து கட்டட வரைபடங்களையும் அறிவிப்பதற்கு பதிவேடொன்று பேணப்பட்டு அவ்வரைபடங்கள் கிடைத்த திகதிகள் மற்றும் அவை தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட திகதிகள் அதில் குறிக்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (17.2) விண்ணப்பங்களில் உள்ள சிக்கல்கள் தொடர்பில் 05 நாட்களுக்குள் உரிய ஆட்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | இணக்கப்பாடானது | | |
| (17.3) விண்ணப்பங்கள் கிடைத்து ஒரு வார காலத்தினுள் நடாத்தப்படும் வரைபடக் குழுவின் முதலாவது கூட்டத்திலேயே விண்ணப்பங்கள் சமா்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |
| (17.4) பிரசைகள் பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட திகதியில் (8 வாரங்களுக்குள்) 80மூ இற்கும் அதிகமான கட்டட வரைபடங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | இணக்கப்பாடானது | | |
| **18. பிரசைகள் பட்டயத்தை நடைமுறைப்படுத்துதல்** | | | |
| **(18.1)** 05/2018 மற்றும் 05/2018 (I) ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு இணங்க பிரசைகள்/ வாடிக்கையாளர் பட்டயமொன்று இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. | இணக்கப்பாடற்றது | ஏற்கனவே பிரஜைகள் பட்டயம் காட்சிப்படுத்தப்பட்டுள் ளது. | சுற்றறிக்கையின்படி திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (18.2) அச்சுற்றிக்கையின் 2.3 ஆம் பந்திக்கு இணங்க, பிரசைகள்/ வாடிக்கையாளா் பட்டயத்தை இயற்றி நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் நிறுவனத்தினால் முறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. | இணக்கப்பாடற்றது | இதற்கான ஆரம்ப முறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையிள்படி உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **19. மனித வளத் திட்டத்தை உருவாக்குதல்** | | | |

| | | | |
|---|---|---|---|
| (19.1) 2018.01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் இணைப்பு 02 படிவத்தை அடிப்படையாகக் கொண்டு மனித வளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | இணக்கப்பாடானது | | |
| (19.2) பதவியணியின் ஒவ்வொரு அங்கத்தவருக்கு வருடமொன்றுக்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களிற்கு குறையாத பயிற்சி வாய்ப்பொன்றை வழங்குவது மேலே குறிப்பிட்ட மனித வளத் திட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | இணக்கப்பாடற்றது | | |
| (19.3) மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள படிவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த பதவியணிக்குமான வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. | இணக்கப்பாடற்றது | ஆரம்ப செயற்பாடுகள் நடைபெற்ற போதிலும் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை | குறித்த சுற்றறிக்கையின் படி ஒப்பந்தம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (19.4) மேற்குறித்த சுற்றறிக்கையின் 6.5 ஆம் பந்திக்கு இணங்க மனித வள அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தல்,திறன் விருத்தி நிகழ்ச்சிகளை உருவாக்குதல்,தேர்ச்சி விருத்தி நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல் என்பன தொடர்பான பொறுப்புக்களை ஒப்படைத்து சிரேஸ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். | இணக்கப்பாடானது | | |
| **20. இலத்திரனியல் உள்ளூராட்சி முறையொன்றை தாபித்தல்.** | | | |
| (20.1) 2018.07.19 ஆம் திகதிய 2018/e-Local Government – 01 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சுற்றறிக்கைக்கு இணங்க இணையத்தின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு பிரசைகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடற்றது | நிதி, திறன் மற்றும் ஆளணி பற்றாக்குறை காரணமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை | சுற்றறிக்கையின் பிரகாரம் இணையத்தள வசதியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (20.2) இணையத்தின் ஊடாக கொடுப்பனவுகளைச' செய்வதற்கு பிரசைகளுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. | இணக்கப்பாடற்றது | நிதி, திறன் மற்றும் ஆளணி பற்றாக்குறை காரணமாக நடைமுறைப்படுத்தப்பட வில்லை | சுற்றறிக்கையின் பிரகாரம் இணையத்தள வசதியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| (20.3) நுகர்வோர் நட்புறவான சேவையொன்றை வழங்குவதற்காக முன்னிலை அலுவலகங்களும் (Front Offices) நுகர்வோர் சேவை நிலையங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. | இணக்கப்பாடானது | | |